உ



தமிழ் ஈழம், உசனை பிறப்பிடமாகவும்

கனடாவை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் இராசரத்தினம் திருஞானசோதி

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

11-09-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திரு. இராசரத்தினம் திருஞானசோதி

அவர்கள்

தோற்றம்
24-05-1940


மறைவு
11-08-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# எமது அன்புத் தெய்வத்தின் திருவடித் தாமரைகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்

வாசம் குன்றா வாழ்வு தந்து
வளியெங்கும் ஒளி தந்து
தேசம் புகழும் நிலை தந்து
திரும்பும் இடமெல்லாம் நினைவு தந்து
அழியாப் பிறப்பெடுக்கும் ஆவல்கொண்டு
ஆன்மா தாங்கிய சரீரம் நீங்கி
ஆண்டவன் நிழலில் அமரத்துவம் கொண்ட
எங்கள் பாசத் தெய்வத்தின் பாதம் பற்றி
உணர்வினால் அபிடேகித்து
உயிரினால் அலங்கரித்து
உதிரத்தால் தீபம் ஏற்றி
எம் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சனை செய்து
அஞ்சலி மலரை அவர் அடிகளில் தூவி
அர்ப்பணம் செய்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



- குடும்பத்தினர்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோருமுடிவி லொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம் பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

-பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் இராசரத்தினம் திருஞானசோதி அவர்களின் வாழ்க்கை வளம்

ஈழவளநாட்டின் தென்மராட்சியின் தென்கோடியில் அமைந்துள்ள உசன் சிற்றூரின் இருகண்கள்போல் காட்சிதரும் உசன் கந்தசாமி கோவில், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் ஆகிய இரண்டையும் அமைத்து நிர்வகித்த பரம்பரையில் வந்த சட்டத்தரணி காலஞ்சென்ற திரு. இராசரத்தினம் காலஞ்சென்ற சிவலோகநாயகி ஆகியோரின் ஏக புத்திரனாக திருஞானசோதி அவர்கள் 1940ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி உதித்தார்.

அன்னார் தனது ஆரம்பக்கல்வியை உசனிலும் தொடர்ந்து உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் கொழும்பில் பொறியியற்துறையில் மேற்படிப்பை மேற்கொண்டிருந்த வேளையில் அன்னாரின் தந்தையார் உடல்நலம் குன்றியிருந்ததையிட்டு அவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப ஊர் திரும்பி தந்தையின் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வந்தார்.

இவ்வாறிருக்க இவர் மணப்பருவம் எய்திய ஞான்று, யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புலோலியூர் பாண்டி மாப்பாண மழவராயர் வழிவந்த காலஞ்சென்ற கனகசபை சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற யோகம்மா ஆகியோரின் மூன்றாவது புதல்வியான யோகலக்சுமியை 1966ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ஆம் திகதி மணம்முடித்து "இல்லறமே நல்லறம்" என வாழ்ந்து வந்தார்.

அன்னார் பிறநாடுகளுக்கு சென்றுவர வேண்டும் என்ற விருப்பில் 1977ஆம் ஆண்டு தனது துணைவியாரோடு பிரான்ஸ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்து சிலகாலம் இனிதே வாழ்ந்து அங்கும் பலரின் நன்மதிப்பைப் பெற்றார். பின்னர் நெருங்கிய உறவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் சேர்ந்து வாழவிரும்பி 1988ஆம் ஆண்டு கனடாவிற்குக் குடிபெயர்ந்தார். தாய் நாட்டின் சூழ்நிலை நிமிர்த்தம் கனடாவைத் தனது நிரந்தர வதிவிடமாகக் கொண்டார்.

திரு. திருஞானசோதியவர்கள் இன்சொல்லன்றி வன்சொல் பேசியறியார். உறவினரிடத்தும் நண்பர்களிடத்தும் குணமேயன்றி குற்றம் கண்டறியார். பிறபிள்ளைகளையும் தன்பிள்ளைகள்போல் பாசமுடன் அரவணைத்து அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமாய்த் திகழ்ந்தார். பொன்னையோ பொருளையோ புகழையோ எதிர்பாராது அமைதியோடும் நல்லறங்களோடும் இனிதே வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு சிறப்பாக வாழ்ந்த திரு. சிவஞானசோதி அவர்கள் எவரும் எதிர்பாராத வகையில் சிலகாலம் கடும் சுகயீனமுற்று 2004ஆம் ஆண்டு ஆவணி மாதம் 11ம் திகதி உறவினர் அனைவரும் உடன் இருக்க இவ்வுலகை நீத்து இறையுலகெய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முருகப்பெருமான் அருள்புரிவாராக.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு

## தாயுமானவர் பாடல்

எத்தனை பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற் கிதுவரை அமைந்தது
அத்தனை எல்லாம் அறிந்தநீ அறிவை
அறிவிலி அறிகிலேன் அந்தோ
நித்தமும் வாக்கும் தேகமும் நினவே
சென்மமும் இனியெனால் ஆற்றாது
இத்திடிங் கென்னை நின்னடிக் குடியாய்
மறைமுடி இருந்த வான்பொருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரர்களின் இரங்கல் செய்தி

எங்கள் குடும்பத்தின் ஆணிவேராக - மூத்தவராக எமக்கெல்லாம் வழிகாட்டிக் கொண்டிருந்த ஓர் அகல்விளக்கு ஆவணி 11ன் அகால வேளையில் அணைந்துவிட்ட செய்தியுடன் விடிந்த பொழுது இருட்டாக விடிந்தது.

எம் கனத்த இதயத்தை சுமக்க முடியவில்லை. வெளியேறாத வேதனைக் கண்ணீர் - உள்ளுக்கே உறைந்து இதயத்தைக் கட்டியாக்கி விட்டது. அந்தக் கோர இரவுதனை சூரியன் துடைத்துவிட்டாலும் எம்முள் அந்த இருள் வெள்ளம் இன்னமும் வடியவில்லை. 'அண்ணா' என்று அழைக்க இனி எமக்கு யாருமில்லை. சொந்த உணர்வுகளே சிறைப்பட்டுப் போயின. அன்றைய நாட்கள் மிகவும் இனிமையானவை. எம்வாழ்வின் வசந்த காலம் உங்களோடு போயிற்று. இன்று நாமே இருண்ட யுகத்தின் கதாநாயகர்கள் ஆகிவிட்டோம்.

நாங்கள் இனிக் காணவிரும்புவது உங்களையல்ல; கனவுகளைத்தான். ஏனென்றால் ஆசை அண்ணா அதில் தானே உங்கள் திருமுகம் காணமுடியும். அதுபோலத்தான் நாம் சுவாசிப்பதும் காற்றையல்ல; உங்கள் நினைவுகளைத்தான்.

சோகம் எம் குடும்பத்தில் ஒரு சுற்றுலா நடத்தியது - கோரம் எங்களை முற்றுகை இட்டது - காலன் உங்களை முத்தமிட்டு விட்டான். நீங்களே எங்கள் வழிகாட்டி என்று எதையும் பண்ணிப் பாராமல் கனவுலகில் இருந்த நாம் காலனின் கோலத்தையும் நிஜத்தையும் உணர்ந்தபோது நிர்வாணப்படுத்தப்பட்டு விட்டோம்.

ஆசை அண்ணா! நீங்கள் எங்களது சரித்திரத்தின் சாறு. உங்கள் வாழ்வு இந்தப் பிரபஞ்சத்தின் பிளிவு. Highland Funeral Home உங்கள் உடலை எரித்ததினால் உயிர் பெற்றுப் போனது; ஆனால் நாமல்லவா உயிரற்றுப் போனோம். தாங்க முடியவில்லை அண்ணா! தவிக்கின்றோம்.

உங்கள் கனவுகட்கு உயிர் கொடுப்பது எம் கடமையல்லவா. உங்கள் காலடிச் சுவடுகளைப் பற்றி எம் எதிர்கால சந்ததி உத்தம புருஷர்களாக எழுவார்கள். எங்கெல்லாம் மானுடம் மரணிக்கின்றதோ அங்கெல்லாம் பூப்பன சகோதர சோகங்களின் கண்ணீர்ப் பூக்கள்.

உறங்கா விழிகளுடன் உங்கள் உறவுகள்
உடன் பிறவாச் சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசன் ஒன்றியத்தின் இரங்கல் செய்தி

## உசனின் உதிரம்
## உறைந்து போயிற்று...!

தென்மராட்சியின் தென்கோடியிலே ஒரு சின்னஞ் சிறிய கிராமம். ஊரின் மத்தியிலே அமைந்துள்ளது ஒரு ஆலயம். குயில் கூவும் குளக்கரை. ஊருக்குள்ளே மல்லிகைப் பூ மணத்துடன் கூடிய மாந்தோப்பு. அதுவே உங்கள் குடியிருப்பு.

உசனின் மண்ணில் நீங்கள் உதித்துவிட்டபோது மலர்ந்து விட்டவை எம் சந்தோஷத்தின் அத்தியாயங்கள்.

காவியங்களில் மட்டுமே கண்டு இருக்கக்கூடிய நல்ல மனிதர்களை நாம் காணும்போது வாழ்த்தியே ஆக வேண்டும். மனிதகுல மாணிக்கமான உங்களை எம் மண் பிரசவித்தபோது எம்மால் வாழ்த்த முடியவில்லை - வணங்கத்தான் முடிகிறது.

எம் கிராமத்து மக்கள் இன்றும் உலகின் பல பாகங்களிலும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அத்திவாரம் இட்டவரே நீங்கள்தானே. அதிகாலை ஆலய வழிபாடு, சைவநெறி, பின் கல்வி, மாலையில் விளையாட்டு என எம்மக்களை ஒன்றிணைத்து நல்வழியில் அவர்கள் கால் பதிக்கக் காரணமாக வாழ்ந்தீர்கள்.

நீங்கள் உசன் என்ற ஊரின் வானத்தின் முழுநிலா- உங்கள் குடும்பம்தான் எம் ஒரே நம்பிக்கை - நீங்களோ ஒரு துருவ நட்சத்திரம் - ஒவ்வொரு வீட்டிலும் நீங்கள் உதயசந்திரன்.

உசனின் உயர்விற்காக உங்கள் குடும்பமும் நீங்களும் செய்தவைகள் எத்தனை! எத்தனை!! இந்த மானுடத்தின் வாழ்வை கடந்தும் உங்கள் புகழ்கள் - செயல்களை இனிவரும் ஒவ்வொரு தலைமுறையும் மறுபிரசவம் செய்யும்.

ஐயகோ எம் இனிய கிராமம் ஆவணி 11 அன்று உங்கள் மறைவு எனும் புயல்காற்றால் கிழிக்கப்பட்ட வாழை இலையாயிற்று. எங்கள் ஊரின் தென்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுக்கு சிறகு ஒடிந்து போனது. முண்டியடித்து வென்றுவிட முடியாத காற்று நொண்டியாயிற்று.

உசனில் எதற்கும் அஞ்சாது உயர்ந்து நிமிர்ந்து நின்றவை மூன்று விடயங்கள்.

1. உசன் கந்தசாமி கோவில்
2. உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
3. திருவின் உள்ளம்

இவை மூன்றும் உங்கட்கே சொந்தம்.

உசனின் கொடியை உயரப் பிடித்தவர்கள் நீங்கள். அதனால்தானே அந்த மண்ணில் பிறந்தவர்கள் உங்கட்கு வைத்த மலர் வளையத்தில் இருந்து ஒவ்வொரு மலராக கொட்டிக் கொண்டே இருந்தது. மலர்களின் கண்ணீரும் உங்கட்கு மட்டும்தான் கிடைத்தது.

இந்த உலகம் உங்கட்கு இடுப்பளவே - ஏனென்றால் உசன் மக்களின் உள்ளங்களில் நீங்கள் ஏறிநிற்பதால் உலகம் இடுப்பளவே.

அந்த கொடிய இரவில் உங்களை நாம் இழந்தபோது எம் வார்த்தைகள் மௌனமாயின. சொற்கள் செயல் இழந்தது. எம் வாழ்வு ஒரு அர்த்தத்தை இழந்தது. இங்கே உங்களை நெருப்பு அணைத்தபோது எம் நெஞ்சில் நெருப்பு நீள்கிறது. எம் உயிருடனே உணர்வுகள் எரிந்து கொண்டு இருக்கின்றன.

விண்ணில் இருந்து எமக்கும் உசனுக்கும் வழிகாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- உசன் ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாக்கள்



## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே.

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்கா ளாயினி யல்லேன் எனலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

## திருவாசகம்

கடையவனே யெனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னு முத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் என்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிர்வளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிர்வளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குமரகுருபர சுவாமிகள் அருளிய
# சகலகலா வல்லிமாலை

**உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்**

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

**நாற்கவி பாட நல்லருள் தருவாய்**

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

**கலைமகள் அருளிய குளிக்க விரும்புதல்**

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனார் தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானது துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந் துரத்த
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்தவெம்
பசியென்பதும் துரத்த வளர்
பாவந் துரத்த மதிமோகந் துரத்த
பலகாரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்
நாவறண் டோடிஇருகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் மறவா நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## இராசரத்தினம் திருஞானசோதி

அவர்கள் சிவபதம் அடைந்தவேளை செய்தியறிந்து எமது இல்லத்துக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

பார்வையாளர் மண்டபத்திற்கு வருகைதந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும் மலர் வளையம் சாத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும்,

இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலியவற்றில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், பரமன் புகழ்பாடும் திருமுறைகளை ஓதியவர்களுக்கும் அனைத்து கிரியைகளையும் நடாத்தி வைத்த அந்தணப்பெரியோர்களுக்கும்,

இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்துத் தந்த "பரடைஸ்" அச்சகத்தாருக்கும்,

மற்றும் தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"**

இங்ஙனம் யோகலக்சுமி திருஞானசோதி
மனைவி
175 Trudelle St. #16, Scarborough, Ont. M1J 3K5 Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா உபதேசம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்**

**Paradiseprint.com**
**Tel: 416-288-6449**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org